# இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்


"உடல் ஒரே உறுப்பால் ஆனது அல்ல; பல உறுப்புகளால் ஆனது. "நான் கை அல்ல; ஆகவே இவ்வுடலைச் சேர்ந்தவன் அல்ல" எனக் கால் சொல்லுமானால், அது அவ்வுடலைச் சேர்ந்ததில்லை என்றாகிவிடுமா? "நான் கண் அல்ல; ஆகவே இவ்வுடலைச் சேர்ந்தவன் அல்ல" எனக் காது சொல்லுமானால், அது அவ்வுடலைச் சேர்ந்ததில்லை என்றாகிவிடுமா? முழு உடலும் கண்ணாயிருந்தால் கேட்பது எப்படி? முழு உடலும் காதாயிருந்தால் முகர்வது எப்படி?" (1 கொரி 12:14-17)

# 'எதிர்நோக்கு' திருத்தந்தையின் நூல் வெளியிடப்பட்டது

வத்திக்கான்: சில காலமாக எதிர் பார்க்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் 'எதிர்நோக்கு' என்ற சுயசரிதை நூல் கடந்த ஜனவரி 14, செவ்வாய்க்கிழமையன்று 80 நாடுகளில் விற்பனைக்கு வந்துள்ளது. திருத்தந்தை தன் கடந்தகால நினைவுகளைப் பகிர்ந்து கொண்டது, பொன்மொழிகள், புகைப்படங்கள் போன்றவை தற்போது ஒரு தொகுப்பாக கிடைக்கும் வழி செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் Random House வெளியீட்டு நிறுவனமும், இங்கிலாந்தில் Viking வெளியீட்டு நிறுவனமும் இந்த நூலை ஆங்கிலத்தில் வெளிட்டுள்ளன. பொதுவாக ஒரு திருத்தந்தை இறைபதம் சேர்ந்தபின் வெளியிடப்படுகிற அவர் குறித்த நினைவலைகள், தற்போது யூபிலி ஆண்டையொட்டி அதன் பின்னணியில் வெளியிட முடிவு செய்ததாக Random House வெளியீட்டு நிறுவனம் அறிவித்துள்ளது.

இப்புத்தகத்திற்கென பல அரிய புகைப் படங்களையும், இதுவரை வெளியிடப் படாத சில விவரங்களையும்




திருத்தந்தையே தானே முன்வந்து வழங்கியுள்ளார். ஏறக்குறைய ஆறு ஆண்டுகளுக்கு மேலாக எழுதப்பட்டு வந்துள்ள இந்த புத்தகம், 20 ஆம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளிலிருந்து துவங்கி, அவரின் இத்தாலிய முன்னோர்கள், அவர்கள் எவ்வாறு துணிவுடன் இலத்தீன் அமெரிக்காவுக்கு குடிபெயர்ந்தார்கள் என்பவைகளுடன் தொடங்கப்பட்டுள்ளது.

பின்னர், அவரின் பாலபருவம், இளம் பருவத்தின் ஆர்வங்களும் முன்நோக்கங்களும், அவரின் தேவ அழைப்பு, இளமைப்பருவ வாழ்வு, இன்று வரையுள்ள அவரின் பாப்பிறைப் பணி ஆகியவைகளுடன் இந்நூல் தொடர்கிறது.

தன் நினைவுகளைப் பகிர்ந்துகொள்ளும் போது, தன் பாப்பிறை காலத்தில் தான் எதிர்கொண்ட சில சிக்கலான நேரங்கள், இக்காலத்தின் பல முக்கியமான நெருக்கடி நிறைந்த கேள்விகள், இன்றைய உலகை பாதிக்கும் போர்கள், உலகம் மற்றும் மதத்தின் வருங்காலம், சமூகக் கொள்கைகள், புலம்பெயர்வு, சுற்றுச்சூழல் நெருக்கடி, பெண்கள், நவீன தொழில்நுட்ப வளர்ச்சிகள், பாலியல் போன்றவைக் குறித்தும் திருத்தந்தையின் கருத்துக்கள் இங்கு பகிரப்பட்டுள்ளன.

# 2025, யூபிலி ஆண்டுக்கான இறைவேண்டல்

## எதிர்நோக்கின் திருப்பயணிகள்

விண்ணகத் தந்தையே,

உம் திருமகனும் எம் சகோதரனுமான இயேசு
கிறிஸ்துவில் நீர் எங்களுக்கு வழங்கிய
நம்பிக்கைக்கும் தூய ஆவியார் வழியாக எங்கள்
இதயங்களில் நீர் பற்றியெரியச் செய்தப் பிறர்
அன்புச் சுடரும், உமது அரசின் வருகைக்கான
எதிர்நோக்கை எங்களில் தட்டி
எழுப்புவனவாக!

நற்செய்தியின் விதைகளை நாளும்
வளர்த்தெடுக்கும் நல்லோராய் உம் அருள்
எம்மை மாற்றுவதாக! தீமையின் ஆற்றல்கள்
மறைந்து உம் மாட்சி நீடித்து ஒளிரும்
பொருட்டு மானிட உள்ளங்கள் புதிய
விண்ணகம் புதிய மண்ணகம் நோக்கிய
காத்திருத்தலில் மாற்றம் பெறுவனவாக!

யூபிலி கொண்டாட்டத்தின் அருள் விண்ணக
வாழ்வுக்கான ஆர்வத்தை `எதிர்நோக்கின்
திருப்பயணிகளாகிய' எம்மில் தூண்டி
எழுப்புவதாக! அதே அருள் எம் மீட்பின்
மகிழ்ச்சியையும் அமைதியையும் அகிலமெங்கும்
அளிப்பதாக!

என்றென்றும் போற்றற்குரிய எம் கடவுளாகிய
உமக்கே மாட்சியும் புகழும் இன்றும் என்றும்
உரித்தாகுக.

ஆமென்.

# மாசாய், புனித தெரெசம்மாள் புதிய ஆலயம் திறப்பு விழா நடைபெற்றது




*ஆயர் பெர்னர்ட் போல் புதிய ஆலயத்தின் திருப்பிடத்தைப் புனிதப்படுத்துகிறார்*

மாசாய்: கடந்த 11 ஜனவரி 2025ம் தேதி, புதிதாகக் கட்டப்பட்ட புனித தெரெசம்மாள் ஆலயத்தின் அர்ப் பணிப்பு மற்றும் திறப்பு விழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. மலாக்கா ஜொகூர் மறைமாவட்ட ஆயர் பெர்னட் போல் தலைமையில், பங்கு தந்தை சிரில் மரியநாயகம் மற்றும் மறைமாவட்டத்திலும் வெளி மறை மாவட்டங்களிலிருந்தும் வந்த அருள்பணி யாளர்கள் சூழ முதல் திருப்பலி கொண் டாடப்பட்டது.

இவ்வாலயமானது 1937ல் ஆங்கிலேயர் களின் ஆட்சி காலத்தில் பலகையினால் கட்டப்பட்டது. ஓர் சிற்றாலயமாக இருந்தது. அன்றைய காலக்கட்டத்தில் ஏறக்குறைய 30 பங்கு மக்களை கொண்டு இப்பங்கு இயங்கி வந்தது. காலவோட்டத்தில் வேலை வாய்ப்பின் நிமித்தம் அதிகமானோர், பாசீர் கூடாங் மற்றும் மாசாய் வட்டாரங் களில் குடியேற துவங்கி, நிரந்தர குடியிருப்பாளர் களாக மாறினார்கள். பங்கின் மக்கள் தொகை பெருகியது. இதனிமித்தம் மறைந்த அருள் பணி பிலிப்

குழந்தைசாமி அவர்கள், பங்கு தந்தையாக இருந்த வேலையில் ஆலய கட்டிடத்ததை விரிவுப்படுத் தினார்.

ஆனால், ஆலய மேம்பாட்டு பணிக்கான அரசாங்கத்தின் முறையான அனுமதி பெறபடவில்லை. அதன் பிறகு அருள்பணி பீட்டர் இங் (இன்றைய மலாக்கா ஜொகூர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்) பங்கு தந்தையாக பணியேற்ற பிறகு, ஆலயத் தின் இடப்பற்றாக்குறையின் காரணமாக புதிய ஆலயம் கட்ட திட்டமிட்டு அதற்கான முயற்சியில் ஈடுப்பட்டார். ஆனாலும் அரசாங்கத்தின் அனுமதி பெற நாள்கள் கடந்தன. இவருக்கு பிறகு, 2007ம் ஆண்டு அருள்பணி அருள் மரியதாஸ், புனித தெரெசமம்மாள் பங்கு தந்தையாக பணியேற்றார். அருள்பணி அருள் அவர்களோடு பங்கின் பொறுப்பாளர்களும் இணைந்து மீண்டும் புதிய ஆலய கட்டட திட்டத்தை ஆரம்பித்தனர். பல ஆண்டுகளாக நில உரிமம் இல்லாது இயங்கிய ஆலய நிலத்திற்கு உரிமம் பெறப்பட்டு முறையாக பெயர் மாற்றம் கண்டது.

தொடர்ந்து, பல நிதி திரட்டும் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட வேளையில், 2016ம் ஆண்டு அருள்பணி எட்ரியன் பிரான்சிஸ் புதிய பங்குத்தந்தையாக பணியேற்றார். பழைய ஆலய கட்டிடம் அவ்வப்பொழுது சீர் செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டது.

தொடர்ந்து, டிசம்பர் 2022ம் ஆண்டு அருள்பணி சிரில் பங்கு தந்தையாக பொறுப்பெற்றார். இவர், புதிய ஆலய கட்டடத்திற்கான நிதி திரட்டும் பணியை தொடர்ந்து செய்தார். பங்கு மக்களின் முயற்சி விடா முயற்சியாக மாறியது.

*தொடர்ச்சி , அடுத்துப் பக்கம்*

# கிள்ளான், புனித லூர்து அன்னை பங்குத் திருவிழாவிற்கு ஆன்மீகத் தயாரிப்பு

**கிள்ளான்:** கடந்த 11 ஜனவரி 2025 அன்று, லூர்து அன்னை பங்கு திருவிழாவை முன்னிட்டு ஆன்மீக தயாரிப்பு கருத்தரங்கு நடை பெற்றது. இதன் மையக்கருத்து ஆன்மிகம், கூட்டு ஒருங்கிணைப்பு மற்றும் தயார்நிலை என்பதாகும். ஏறக்குறைய 150



பங்கு மக்கள் இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.
தமிழ் நாட்டை சேர்ந்த அருட்பணியாளர் செபஸ்டின் அற்புதராஜ் (ஓபிசி) இந்த கருத்தரங்கை வழிநடத்தினார். அவர் யூபிலி 2025 பற்றி எப்படி கூட்டு ஒருங்கிணைப்புடன் பயணிக்க வேண்டும் என்பதை விளக்கினார். ஒப்புரவு, எதிர்நோக்கு, செபம், இறைவார்த்தை வாசிப்பது, புனிதர்களை பற்றி கற்று கொண்டு அவர்களை போல வாழ்வது மற்றும் பங்கின் ஒற்றுமையை பற்றி மிகவும் தெளிவாக விளக்கினார். அவர் திருமுழுக்கு பெற்ற ஒவ்வொருவரும் ஆண்டவரின் பணியில் ஈடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

கூட்டு ஒருங்கிப்பு செயல்முறையை மற்றும் தனது சொந்த அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். கூட்டு ஒருங்கிணைப்பு கேள்விகள் எவ்வாறு வெவ்வேறு கட்டங்களில் மதிப்பாய்வு செய்யப்பட்டு உரையாற்றப்பட்டன என்பதை அவர் விவாதித்தார். குறிப்பாக மற்றவர்களுக்கு சிறந்த கவனிப்பை வழங்குவதில், மேம்படுத்துவதற்கான வழிகளைக் கருத்தில் கொள்ளுமாறு அனைவரையும் ஊக்குவித்தார்.

தொடர்ந்து அவர் யூபிலி ஆண்டை பற்றியும் அதன் பாரம்பரியத்தை பற்றியும் தெளிவாக கூறினார். இறுதியாக நற்கருணை ஆசீருடன் முடிவுற்றது.

-நேசா தேவசகாயம்

# இறைவார்த்தை வாழ்வின் மையமாக இருக்கட்டும்

## ‘உமது வாக்கை நான் நம்புகிறேன்’

இன்று கத்தோலிக்கத் திருஅவையில் ‘இறைவார்த்தை ஞாயிறு **‘உமது வாக்கை நான் நம்புகிறேன்’ (திபா 119:74)** என்ற கருப்பொருளில் கொண்டாடப்படுகிறது.

இயேசுவின் முதல் சீடர்களைப் போல, நமது வாழ்வு என்னும் கரையில், படகு என்னும் குடும்பத்தையும், வலைகள் என்னும் உறவுகளையும் விட்டு அவரின் வார்த்தைக்கு செவிசாய்க்க இறை வார்த்தை நம்மை அழைக்கின்றது.

உயிருள்ள இறைவார்த்தையான இயேசுவிற்கு செவிசாய்க்கவும், மகிழ்வுடன் நமது நம்பிக்கை வாழ்விற்குத் திரும்பவும் இறைவார்த்தை ஞாயிறு உதவட்டும் என்றும், நமது எண்ணங்கள் மற்றும் பிரச்சனைகள் அல்ல மாறாக இறைவனின் வார்த்தை நமது வாழ்வின் மையமாக இருக்கட்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ். கூறியுள்ளார்.

சீடர்கள் தங்களது பழைய வாழ்வை, பழக்க வழக்கங்களை விட்டு விட்டு இயேசுவைப் பின்பற்றினர். அவ்வாறு, நாமும் நமது பழக்க வழக்கங்களை விட்டு வெளியேற முடியாமல் வலையில் சிக்கிய மீன்கள் போன்று போராடிக் கொண்டிருக்கின்றோம். இறைவார்த்தையைச் செவி மடுத்து நம்பினாலொழிய நம்மால் நம்மை விடுவிக்க இயலாது.




இறைவார்த்தையுடன் நம்மை நாம் இணைத்துக் கொள்ளும்போது நமது வாழ்வு மறுபரிசீலனை செய்யப்படுகிறது. நமது காயப்பட்ட நினைவுகள் குணமடையும். இறைவார்த்தை நமக்கு நலமளித்து நற்குணங்களில் நம்மை நிலை நிறுத்தி, மீட்கப்பட்ட கடவுளின் அன்புப் பிள்ளைகள் நாம் என்பதை வெளிப் படுத்தும்.

-ஆர்.கே.

## சிறப்பு அறிவிப்பு

சீனப் புத்தாண்டை முன்னிட்டு, 31 ஜனவரி மற்றும் பிப்ரவரி 7 ஆகிய இரு வெள்ளிக்கிழமைகளில் ஒருசந்தி கடைப்பிடிப்திலிருந்தும் மாமிசம் உண்பதிலிருந்தும் (புலால் நோன்பு) விலக்கு அளிக்கப்படுகிறது. இறைமக்கள் இந்நாள்களில் மற்ற வகையான தவ முயற்சிகளில், குறிப்பாக தொண்டு பணிகள் மற்றும் இந்த யூபிலி ஆண்டில் பக்தி முயற்சிகள் வழியாக இந்த விலக்கை ஈடு செய்யலாம் என்று வட்டார திருவழிபாட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

*முதல் பக்கத் தொடர்ச்சி.*

பினாங்கு, கோலாலம்பூர் ஆகிய இரு மறைமாவட்டங்களில் நிதி திரட்டும் திட்டத்தை பொறுப்பாளர்களோடு இணைந்து அயராது மேற்கொண்டனர். அதோடு, அருள்பணி சிரில் அரசாங்க தரப்புக்களின் அனுமதியை பெற்று புதிய ஆலயக் கட்டடப் பணியைத் துரிதப்படுத்தினார். ஆகஸ்டு 23'-ல், அடிக்கல் நாட்டு நிகழ்ச்சியோடு கட்டட வேலைகள் ஆரம்பமாகி அக்டோபர் 2024 நிறைவுற்றது. அருள்பணி சிரில் அவர்கள், தினமும் ஆலய கட்டட வேலையை நேரில் சென்று கண்காணித்ததோடு ஆலயத்தில் பயன் படுத்தகூடிய அனைத்துப் பொருட்களும் நல்ல தரமான பொருட்களாக இருக்க




வேண்டும் என்பதில் மிகவும் துல்லியமாக செயல்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

எங்கள் புதிய ஆலயத்தை கட்டியெழுப்ப உதவிய அனைத்து முன்னால் அருள்பணியாளர்களுக்கும், பொறுப்பாளர்களுக்கும், இறைவனுக்கும் பங்கு மக்கள் நன்றி கூறினர்.

--- நேன்சி ஞானபிரகாசம்

# இறைவாக்கு நம்மிலும் நிறைவேறும்!

இன்று ஆண்டின் பொதுக்காலத்தின் 3ஆம் ஞாயிறு. ஒவ்வோர் ஆண்டும், பொதுக் காலத்தின், மூன்றாம் ஞாயிறை இறைவார்த்தை ஞாயிறு என்று கொண்டாடுவதற்கு திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அழைப்பு விடுத்துள்ளார்.

முதல் வாசகத்தில் நெகேமியா ஆளுநராக இருந்த சமயத்தில், அவருடன் பக்கபலமாக இருந்தவர்தான் எஸ்ரா. இவர் மறைநூல் அறிஞராகவும், குருவாகவும் இருந்தவர். எஸ்ரா மக்கள் முன்னிலையில் திருநூலை மேடைக்கு எடுத்துச் செல்கிறார். நூலைத் திறந்து வாசிக்கிறார். அனைத்து மக்களும் எழுந்து நிற்கின்றனர். இறைவார்த்தையைச் சரியாகப் புரிந்து அறிந்து மக்களுக்குத் தெளிவாக விளக்க வேண்டியது நமது கடமை என்பது உணர்த்தப்ப்டுகிறது.

இரண்டாம் வாசகத்தில் உடலும் உறுப்பும் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு உயிர் வாழ்கிறதோ அதே போல நாம் அனைவரும் கிறிஸ்துவின் உடல் என்றும் கிறிஸ்துவை மாட்சிபடுத்த நாம் அனைவரும் ஒரு உடல் போல் ஒற்றுமையோடும் அன்போடும் வாழ வேண்டுமென்று பவுல் அடிகள் வலியுறுத்துகிறார்.

நற்செய்தியில் திருமுழுக்குப் பெற்றவுடன் தூய ஆவி நிறைந்தவராய் இயேசு தம் பணிவாழ்வைத் தொடங்கினார்.

மனிதர்கள் முழுவாழ்வு பெறும்போது இறைவன் மாட்சியுறுகிறார். ஏழைகள் நிறைவாழ்வு பெறும்போது இறையாட்சி முழுமை பெறுகிறது. இயற்கையனைத்தும் முழுவாழ்வு பெறும்போது புதிய வானகமும் புதிய வையகமும் மலர்கிறது. ஏழை மக்களின் கூக்குரல் இறைவனின் செவிக்கு எட்டுகிறது என்கிறார் திருப்பாடல் ஆசிரியர். எனவே இறைவனின் அன்புக்கு உரியவர்களாக கருதப்படுகிறார்கள் ஏழை மக்கள்.

இதன் பொருட்டு எல்லா பங்குகளிலும் கரித்தாஸ் அமைப்பு மூலம் ஏழை மக்களுக்கு சிறப்பாக கல்விக்கு, நோயாளிக்கு, இயற்கை பேரிடர் வெள்ளம் போன்ற நிகழ்வுகளுக்கு தம்மால முடிந்த அளவுக்கு எல்லா உதவிகளையும் செய்து வருகிறது திருஅவை.

புனித பவுல் அடிகள் கூறுவதப்போல், நாம் கிறிஸ்துவின் உடல்; ஒவ்வொருவரும் இவ்வுடலில் தனித்தனி உறுப்புகளாக இருந்தாலும் யூதரானாலும் கிரேக்கரானாலும், அடிமைகளானாலும் உரிமைக் குடிமக்களானாலும் நாம் எல்லாரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம் என்பதை பவுல் நினைவூட்டுகிறார்.

நாம் ஒன்றித்துச் செயல்பட வேண்டும். நம்மிடையே வேறுபாடுகள்கூடாது. இன்றைய மூன்று வாசகங்களும் திருப்பாடலும் ‘ஆண்டவரே! உம் வார்த்தைகள் வாழ்வுதரும் ஆவியைக் கொடுக்கின்றன’ என அறிந்து செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்துவதை மனதில் நிறுத்தி செயல்படவோம்.

### இறைவார்த்தை ஞாயிறு

**‘உமது வாக்கை ந ான் நம்புகிறேன்’ (திபா 119:74)**

இன்று இறைவார்த்தை ஞாயிறு கொண்டாடப்படுகிறது. நன்மை பயக்கும் செய்திகளைப் பறைசாற்றும் கருவிகளாக நாம் மாறவேண்டும். நாம் பரிமாறும் செய்திகள், வெறும் தகவல் பரிமாற்றமாக இல்லாமல், செயலுக்கு, அதுவும், உன்னதமானச் செயலுக்கு, மக்களைத் தூண்டும் சவால்களாக அமையவேண்டும். அனைத்திற்கும் மேலாக, வாய் வார்த்தைகள் வழியே பகிர்ந்துகொள்ளப்படும் செய்தியைவிட, நம் வாழ்வின் வழியே நற்செய்தியைப் பறைசாற்றும் கருவிகளாக நாம் ஒவ்வொருவரும் மாறவேண்டும் என்று இந்த இறைவார்த்தை ஞாயிறன்று மன்றாடுவோம்.

இவ்வாண்டு இறைவார்த்தை ஞாயிறுவின் கர்பொருள் ‘உமது வார்த்தையில் எனது எதிர்நோக்கு’ என்பதாகும்.

-ஆ.வி.டேவிட், குளுவாங்

### பொதக்காலம் 3-ம் ஞாயிறு

| | |
|---|---|
| முதல் வாசகம்: | நெகே 8:2-4a,5-6,8,10 |
| திரு.பாடல் | 19: 7. 8. 9. 14 |
| 2-ம் வாசகம் | 1 கொரி 12: 12-30 |
| லூக்கா | 1: 1-4; 4: 14-21 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3(C)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 1**
**திருப்புகழ் மாலை:வாரம் 3**